கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,

பெரியகுளம்.

<u>அசல் வழக்கு எண்.</u> 52/2024 நாள். 15.04.2026

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி எண்.</u> 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லட்சுமணன் | ஊர் | : | கெங்குவார்பட்டி |
| தந்தை பெயர் | : | முத்து சுப்பிரமணியன் | தாலுகா | : | பெரியகுளம் |
| தொழில் | : | வாட்ச்மேன் | வயது | : | 63/2026 |

ஆணையுறுதி சட்டப்படி சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். 1908ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பில் 2ம் சாட்சியின் முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கின் 4ஆம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பில் நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னுடை அண்ணன் கருணாகரன் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் வேடசந்தூர் கிளையில் நடத்துனராக பணிபுரிந்தார். இந்த வழக்கில் 1 பிரதிவாதி பூங்கொடி எனது அண்ணன் மனைவி, 2,3 பிரதிவாதிகள் என்னுடைய அண்ணனின் பிள்ளைகள் என்றால் சரிதான். என்னுடைய அண்ணன் வேலை பார்த்து அதில் வந்த வருமானத்தை கொண்டு அவருடைய மனைவி மக்களை பராமரித்து வந்தார் என்றால் சரிதான். அந்த வகையில் என் அண்ணன் கருணாகரனுக்கு குடும்ப அத்தியாவசிய செலவும் மற்றும் சில்லரை கடன்களும் ஏற்பட்டது என்றால் சரிதான். என்னுடைய அண்ணன் எழுதிக்கொடுத்த ஈடுகடன் சொத்து எனக்கும் எனது அண்ணனுக்கும் பூர்விகமான பாத்திய பட்ட சொத்துதாகும். ஈடுகடன் சொத்தை பொறுத்தை பாகபிரிவினை எதுவும் செய்ய வில்லை என்றால் சரிதான் வா.சா.ஆ1 ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என் அண்ணனின் கையொப்பம் ஆகும். இரண்டாவது கையொப்பம் என்னுடைய கையொப்பம் ஆகும். வா.சா.ஆ 1 ஆவணம் எனது சகோதரரும் நானும் செல்வக்குமாரிடம் ரூ.4,50,000 கடன் பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்த ஈடுகடன் பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சரத்துக்களின் படி எங்களில் 1 வது நபரின் (கருணாகரன்) குடும்ப அத்தியாவசிய செலவுக்காகவும் சில்லரை கடன் தீர்ப்பதற்காகவும் நாளது தேதியில் நாங்கள் ரொக்கம் பெற்றுக் கொண்டது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஈடுகடன் பத்திரத்தின் படி நாங்கள் வாதியிடம் பெற்றுக்கொண்ட ரூ.4,50,000/– தொகையை நாங்கள் இருவரும் பிரித்துக்கொண்டோமா என்றால் இல்லை கருணாகரனே தொகை முழுவதும் வைத்துக்கொண்டார். வாதி செல்வக்குமாரும் நானும் நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். அதன்

அடிப்படையில் மேலும் ரூ.1 லட்சத்திற்கு வா.சா.ஆ 2 மேல் ஈடுகடன்பத்திரம் வாதிக்கு எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணத்தில் கண்ட ரூ.1 லட்சம் தொகையை வாதியிடம் இருந்து நாங்கள் பெற்றுக்கொண்டு அந்த தொகை முழுவதும் கருணாகரனே வைத்துக்கொண்டார். வா.சா.ஆ 1,2 ஆவணத்தில் கண்ட ஈடுகடன் தொகைகளை வாதி என்னிடமும் கருணாகரனிடமும் கேட்டார். நானும் கருணாகரனும் வா.சா.ஆ.1,2 ஆவணங்களில் கண்ட அசல் வட்டி தொகைகளை வழக்கு தாக்கல் செய்யும் காலம் வரை வாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது சகோதரர் கருணாகரன் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் இறந்த பின்பு 1 முதல் 3 பிரதிவாதிகளிடமும் என்னிடமும் வா.சா.ஆ.1,2 ஆவணங்களில் கண்ட அசல் வட்டி தொகைகளை செலுத்த வேண்டும் என்றால் சரிதான். நானும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் வா.சா.ஆ.1,2 ஆவணங்களில் கண்ட அசல் வட்டி தொகைகளை செலுத்தாததால் வாதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். இந்த வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு நானும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் அசல் வட்டி தொகைகளை செலுத்திவிடுவதாகவும் சிறிது காலஅவகாசம் வேண்டும் என்றும் வாதிகளிடம் கேட்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ 1,2 ஆவணங்களின் படி கடன் தொகைகள் வாங்கிய விபரம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தெரியும் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகவில்லை. 3 ஆம் பிரதிவாதிக்கும் திருமணம் ஆகவில்லை. எனது சகோதரின் குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பணபலன்கள் ஆகியவற்றை 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் அனுபவிக்கின்றார்கள் என்றால்

சரிதான். 1முதல் 3 பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ 1,2 ஆவணங்களில் கண்ட அசல் வட்டி தொகைகளை வாதிக்கு திரும்ப செலுத்திபோக போதிய வாய்ப்பு வசதி உள்ளது என்றால் சரிதான். ஈடுகடன் பத்திரங்களில் கண்ட தொகைகளை செலுத்தபோவதில்லை என்றும் சொத்து மட்டுமே வேண்டும் என்றும் கூறி மோசடி செயலில் ஈடுபடுகிறார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ 1,2 ஆவணங்களில் கண்ட தொகையை இருவரும் சேர்ந்து பெற்றுக்கொண்டதால், இருவரின் பாக சொத்துக்களில் இருந்து கடனை அடைக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். நான் கடன் வாங்கவில்லை என்று சொல்லி உள்ள நிலையில் எதற்காக ஈடுகடன் பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்றால் எனது அண்ணன் வேலை போய்விடும் என்று சொன்னதால் எழுதிக்கொடுத்தேன். என்னுடைய பாக சொத்தை பொறுத்து ஈடுகடன் சொத்தில் இருந்து விடுவித்து வாதி கோரிய படி தீர்ப்பாக எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.04.15 12:35:16 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.